# ஸ்ரீரங்க ஆரணம்

சித்தர் ஆன்மீக மாத இதழ்



ஆசிரியர். அருட்சேனை தளபதி கு. இரவிமணி B.Sc.,B.Tech.,

இந்து : 1 1-5-1993 விலை ரூ. 3-50 ஆரணம் . 1

# இந்துமத வரலாற்றுப் பேருண்மைகள்

## பிறப்பிடம் :

'இளமுறியா'க் கண்டம் (The Lost Lemuria) எனும் கடலுள் மறைந்த 'குமரிக் கண்டம்'

## காலம் :

பதினெண் சித்தர்களால் அனாதிக் காலத்தில் அதாவது, இன்றைக்கு மெய்யான இந்துமத ஆண்டுக் கணக்கின்படி 43,73,094 ஆண்டுகளுக்கு முன்னால் [ஆங்கில ஆண்டுக் கணக்கின்படி கி.மு. 41,71,104-இல்] தோற்றுவிக்கப்பட்டது

## மொழி :

அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழி.

## வழிபாட்டு நிலையம் :

108 வகைத் திருப்பதிகள், 243 வகைச் சத்தி பீடங்கள், 1008 வகைச் சிவாலயங்கள்.

## இந்துமதக் காவலர் :

ஞானாச்சார்கள் எனும் பதினெண் சித்தர் பீடாதிபதிகள்.

## இந்து மதம் வளர்ப்பவர் :

இம்மண்ணுலகில் தோன்றும் 48 வகை சித்தர்கள், கருப்புகள், வழிபடு நிலையினர்கள், கருவறை மூலவர்கள், அருளாளர்கள், மருளாளர்கள், அருளாளிகள், மருளாளிகள் அருளாடு நாயகங்கள், மருளாடு நாயகங்கள் எண் வகை மூல ஆச்சாரியார்கள், பதின் மூன்று வகை குருவழி ஆச்சாரியார்கள், நாற்பத்தெட்டு வகை பீடாதிபதி வழி ஆச்சாரியார்கள்...எனப் பலர்.

## இந்துவேத நூல்கள் :

108 பூசை மொழி நூல்கள், 48 பூசை விதி நூல்கள், 96 தத்துவ நூல்கள், 144 செயல் சித்தாந்த நூல்கள் ஆக 396 நூல்கள்.

## இந்துமத நூல்கள் :

1. கருவாக்கு 2. கருவாக்கியம் 3 கருவாசகம் 4. குருவாக்கு 5. குரு வாக்கியம் 6. குருவாசகம் 7. தருவாக்கு 8. தருவாக்கியம் 9. தருவாசகம் 10. திருவாக்கு 11. திருவாக்கியம் 12. திருவாசகம் 13. அருள் வாக்கு 14. அருள்வாக்கியம் 15. அருள் வாசகம் 16. மருள் வாக்கு 17. மருள் வாக்கியம் 18. மருள் வாசகம் எனும் பதினெட்டு நூல்களும்,

1. அத்தரம் 2. அத்திரம் 3. அத்திறம் 4. சாத்தரம் 5 சாத்திரம் 6, சாத்திறம் 7. சூத்தரம் 8. சூத்திரம் 9. சூத்திறம் 10. தோத்தரம் 11. தோத்திரம் 12. தோத்திறம் 13. நேத்தரம் 14. நேத்திரம் 15. நேத்திறம் 16. வேத்தரம் 17. வேத்திரம் 18. வேத்திறம்

எனும் பதினெட்டு நூல்களும் ஆக முப்பத்தாறு (36) நூல்கள்.

## இந்துமதப் பயன்கள் :

தனிமனித வாழ்வு குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு எனும் நான்கையும் வடிவப்படுத்தி வளமான வாழ்வு பெறச் செய்தல்.

இந்து மதம் என்பது முன்னோர் வழிபாடு, மூத்தோர் வழி நடத்தல்.

அறவி, உறவி, துறவி, மறவி எனும் நான்கு வகையிலும் வாழ்வது மதவாழ்வே.

அருவம், அருவுருவம், உருவ அருவம், உருவம் எனும் நான்கு வகை வழிபாடும் பயனுடையனவே.

## ஆதாரம் :

மூலப் பதினெண் சித்தர் பீடாதிபதி ஆதி சிவனாரின் குரு பாரம்பரியம்

## தொகுத்தவர்கள்

1. சித்தரடியார் வேம்பை சீ. மணி
2. சித்தரடியார் ப. கோவிந்தராசு
3. சித்தரடியார் ந. விசயசந்திரன்

மனித இனம் கண்ட முதல் மதம் இந்துமதம் எனப்படும் சித்தர் நெறியே.

# இந்து ஆரணம்

இந்து : 1 | 7-4-93 | விலை ரூ. 5-00 | ஆரணம் : 1

இந்த மாத இதழின் முதல் தலையங்கம் உலக மத வரலாற்றின் தலையாய அங்கமாக அமைய வேண்டுமென்று திருவருளை வழுத்தி எழுதுகின்றோம்.

அண்மைக் காலத்தில் இதுபோன்று ஆன்மீக இதழ்களும் நாளேடுகளும், வார ஏடுகளும்... எண்ணற்று எழுந்து வந்துள்ளன; வருகின்றன. இவற்றுக்கிடையில் பதினெண்சித்தர் மடம் வெளியிடும் 'இந்து ஆரணம்' எந்நிலை எய்தப் போகிறது என்பதைக் கோடிட்டுணர்த்த இந்த முதல் தலையங்கம் ஆன்மீக உலகின் தனித் தன்மையை நிலை நாட்டிட முயலுகிறது.

உலகியலில் கல்வி, தொழில், விளையாட்டு, மண்ணியல், நீரியல், தாவரவியல், விலங்கியல், மானுடவியல், விண்ணியல்... என்று அனைத்துத் துறையிலும் ஆராய்ச்சிகள் செய்யப்பட்டு வருகின்றன. ஆனால், ஆன்மீகத் துறையில் மட்டும் ஆராய்ச்சிகள் செய்யப்படவில்லை! செய்யப்படுவதில்லை!! செய்யப்படுவனவும் நடுநிலைமையற்றுச் சார்புடையனவாகப் பயனற்றுவிடுகின்றன. இந்நிலையில் மாற்றங்காணப்புறப்பட்டுள்ள பதினெண்சித்தர் மடத்தின் தலையங்கத் தலையங்கமே இது.

''மனிதரைக் கடவுளாக்கும் பூசை மொழி''—;

''வாருங்கள் மானுடரே உங்களைக் கடவுளாக்குகிறோம்''- என்ற அழைப்பு;

''மனிதரைச் சந்தித்த கடவுள்களின் வரலாறு''

''கடவுள்களைச் சந்தித்த மனிதர்களின் வரலாறு;''

''கடவுள்களோடு தொடர்புடை அருளாளர்க்ளின் பட்டியல்'';

''வகை வகையான கடவுள்களை வழிபடுதற்குரிய வகை வகையான பூசை மொழிகள், பூசைவிதிகள்''

விண்ணிலிருந்து, வந்த வருகின்ற, வரக்கூடிய கடவுளின் வரலாறும் வாழ்வியலும் பற்றிய செய்திகள்'';

''மண்ணிலிருந்து தோன்றிய, தோன்றிக்கொண்டிருக்கின்ற தோன்றப் போகின்ற கடவுள்களின் வரலாறும் வாழ்வியலும் பற்றிய செய்திகள்'';

''பயிரினங்களிலிருந்து தோன்றிய, தோன்றிக் கொண்டிருக்கின்ற, தோன்றப் போகின்ற கடவுள்களின் வரலாறும் வாழ்வியலும் பற்றிய செய்திகள்'';

''உயிரினங்களிலிருந்து தோன்றிய, தோன்றிக் கொண்டிருக்கின்ற, தோன்றப் போகின்ற கடவுள்களின் வரலாறும் வாழ்வியலும் பற்றிய செய்திகள்''

''அருளாளர்கள் உண்டாக்கிய, உண்டாக்கிக் கொண்டிருக்கின்ற, உண்டாக்கப்

போகின்ற கடவுள்களின் வரலாறும் வாழ்வியலும் பற்றிய செய்திகள்.

''அருவக் கடவுள்கள், அருவுருவக் கடவுள்கள், உருவ—அருவக் கடவுள்கள், உருவக் கடவுள்கள் எனும் நான்கு வகைக் கடவுள்களின் வரலாறும் வாழ்வியலும் பற்றிய செய்திகள்;"

''குடும்ப ஆண்டவர்கள், குல தெய்வங்கள், கிராம தேவதைகள், தேவர்கள், நாட்டுக் கடவுள்கள் எனும் நான்கு வகையினரின் வரலாறும் வாழ்வியலும்பற்றிய செய்திகள்''

''ஆண் கடவுள்கள், பெண் கடவுள்கள், அலிக் கடவுள்கள் எனப்படும் மூன்று வகைக் கடவுள்களின் வரலாறும், வாழ்வியலும் பற்றிய செய்திகள்;''

''கடவுள்கள் வாழுகின்ற, வாழ்வதற்குரிய, வாழக் கூடிய நாற்பத்தெட்டு வகைப்பட்ட கருவறைகள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபாட்டு நிலையக் கருவறைகள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வெட்ட வெளிக் கருவறைகள், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கோயில் மூலக் கருவறைகள் பற்றிய செய்திகள்;''

—முதலிய அரிய, கூரிய, சீரிய, பெரிய, நேரிய, வீரிய உண்மைகளை அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் அருட்கொடையான இந்து வேத நூல்கள் முன்னூற்றுத் தொண்ணூற்றாலிருந்தும், இந்து மத நூல்கள் முப்பத்தாறிலிருந்தும் உலக மக்களுக்கு வழங்குவதற்காகவே இந்த 'இந்து ஆரணம்' வெளிவருகின்றது. எனவே, நாத்திகர், ஆத்திகர், இரண்டுக்கும் அப்பாற்பட்டவர்... என்ற வேறுபாடு இன்றி அனைவருமே இந்த 'இந்து ஆரணம்' தொடர்ந்து வெளிவருவதற்குத் தாங்கள் தங்களால் இயன்ற எல்லா வகையான ஏந்துகளையும், உதவிகளையும், துணைகளையும், ஆதரவுகளையும் வழங்குமாறு அறிவிப்பு அழைப்பு விடுக்கப்படுகிறது.

இந்து வேதநாயகம், இந்து மதத் தந்தை,
அந்தணர் அண்ணல்

**ஞானாச்சாரியார்**

இந்து வேதத்தை அருளிய
பதினெண் சித்தர் மடம்
இந்து மதத்தைத் தோற்றுவித்த
பதினெண் சித்தர் பீடம்

---

அறிவிக்கை எண் : 7777 தொலைபேசி எண் : 664447

**ஒவ்வொரு கோயிலுக்கும் ஒரு மடாதிபதி உருவாகிட**

**இந்து வேத பாடசாலைப் பயிற்சி**

1. மடாதிபதி, 2. பீடாதிபதி, 3. சன்னிதானம், 4. ஆதீனம், 5. தம்பிரான், 6. பண்டாரம் 7. பண்டாரசந்நதி, 8. பண்டாரசந்நிதி, 9. அரியவாள், 10. கூரியவாள், 11. சீரியவாள், 12. பெரியவாள், 13. நேரியவாள், 14. வீரியவாள், 15. ஏமகோடிப்பீடம், 16. காமகோடிப் பீடம், 17. சோமகோடிப்பீடம், 18. வாமகோடிப்பீடம்...முதலிய அருட்பட்டங்களுக்குரிய பயிற்சி பெறலாம்.

''இந்து வேதம் வளர்ப்போம்''
''இந்து மதம் காப்போம்''

அந்தணர் அண்ணல், ஞானாச்சாரியார்,
இந்துவேத நாயகம், இந்து மதத் தந்தை, குவலய குருபீடம்,
பதினெண் சித்தர் மடாதிபதி, பீடாதிபதி, கருமூல ஆதினம்.
தொடர்பு : 13, குமாரசாமி தெரு, வரதராசபுரம், அம்பத்தூர், சென்னை-53.

**இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

---

# இந்து வேதத்தையும் இந்து மதத்தையும் புரிந்துகொள்ளுங்கள்

ஞானாச்சாரியாரின் அறிவுரைகளிலிருந்து தொகுத்தவர்கள் :

1. அருள்மிகு சித்தர் தேரையர் — சீ. லோகநாதன்
2. அருள்மிகு சித்தரடியார்
3. அருள்மிகு பா. பூபதி
4. அருள்மிகு டி.ஆர். பிரபாகரன்
5. அருள்மிகு இரா. வெங்கடேசன்

1. இந்து வேதம் என்பது அண்டப் பேரண்டங்கள் முழுதுமுள்ள நாற்பத்தெட்டு வகைக் கடவுள்கள், நாற்பத்தெட்டு வகை வழிபடு நிலையினர்கள், பதினெண் சித்தர்கள், நப்பத்தெட்டு வகைச் சித்தர்கள் எனப்படும் நான்கு வகையினர் மட்டுமே முறையாகவும், முழுமையாகவும் படிக்கின்ற முன்னூற்றுத் தொன்னூற்றாறு நூல்களை உடைய ஒன்றாகும். இதன் செயல் வடிவமான இந்து மதத்தின் நூல்கள் முப்பத்தாறும் இந்த நால்வகையினராலேயே முழுமையாகப் படிக்கப்படுகின்றனவாக இருக்கின்றன.

2. ஓர் இந்துவின் வாழ்க்கைக்குத் தேவையான கருத்துக்கள், செய்திகள், செயல் நடைமுறைகள் முதலியவை அனைத்தும் இந்து வேதத்துக்குரிய முன்னூற்றுத் தொன்னூற்றாறு நூல்களும், இந்து மதத்துக்குரிய முப்பத்தாறு நூல்களும் சேர்த்து ஆகமொத்தம் நானூற்று முப்பத்திரண்டு (396-|-36=432) நூல்களில் இருந்துதான் பெறப்படுகின்றன.

3. ஒவ்வோர் இந்துவும் இந்த 432 நூல்களையும் படிக்கத் தேவையில்லை, கடவுள் என்றுள்ளவர்கள் அவ்வப்போது இந்துக்களுக்குத் தேவையான கருத்துக்கள். செய்திகள், செயல் நடை முறைகள்...முதலிவற்றை நேரில் வந்தே தங்களது கைப்பட எழுதித் தருகிறார்கள். எழுதித்தருவார்கள் என்ற ஏற்பாடு இருக்கிறது.

4. இந்த ஏற்பாடு, இந்த அண்டபேரண்டங்களில் உள்ள ஒவ்வோர் உலகிற்கும் சிறுசிறு மாறுபாடுகளைப் பெற்றுள்ளது. இந்த உலகைப் பொறுத்தவரை அண்டபேரண்டமாளும் பதினெண் சித்தர்களும் அவர்களின் துணைவர்களான பதினெட்டாம் படிக் கருப்புகளும்அடிக்கடி இம்மண்ணுலகில் பிறப்பெடுத்து இந்துக்களுக்குத் தேவையான கருத்துக்கள், செய்திகள், செயல்நடைமுறைகள் வழி காட்டல்கள், வழித்துணைகள், ஏந்துகள் முதலியவைகளை ஏட்டறிவாகவும், பட்டறிவாகவும் வழங்குகின்றனர்,

5. நமது உலகைப் பொறுத்தவரை மூலப்பதினென் சித்தர்களின் தலைவரான ஆதிசிவனார்தான் இந்துவேத நூல்களையும், இந்துமத நூல்களையும் மானுடர் அனைவர்க்கும் பொதுவானதாக வழங்கியருளினார். இவரே, இந்து வேதத்தை இம் மண்ணுலகுக்கு வழங்கும் பதினென் சித்தர் மடத்தின் முதல் மடாதிபதியாகவும், இந்து மதத்தை இம்மண்ணுலகில் தோற்று வித்துப் போற்றிப் பேணிக் காத்திடும் பதினென் சித்தர் பீடத்தின் முதல்பீடாதிபதியாகவும் பொறுப்பேற்றார்.

6. இப்பூவுலகில் விலங்குகளோடு, விலங்குகளாக வாழ்ந்திட்ட மணீசர்களைப் (மண் + ஈசர் = மணீசர் — மண்ணின் தலைவர் — உயிரினங்களுக்குத் தலைமை தாங்கும் மணீசர்) பண்பட்ட மனிகர்களாக் கிடவே பதினெண்சித்தர்கள் இந்துவேத நூல்களையும், இந்து மத நூல்களையும் அருட்கொடையாக வழங்கினர். இந்த நூல்கள் அண்ட பேரண்டமாளும் பதினெண் சித்தர்களின் தாய்மொழியும்; அண்ட பேரண்ட அருளுலக ஆட்சிமொழியுமான; அருளூறு அமுதத் தெய்வீகச் செந்தமிழ் மொழியில் தான் எழுதப்பட்டுள்ளன.

7. அனாதிக் காலத்தில் இம்மண்ணுலகின் நிலப்பரப்பு முழுமையாக உறுதிப்படாகல் பெரும்பகுதி மென்மையான மண்துகள்களால் நிறைந்திருந்த காலத்தில் இம் மண்ணுலகு, இளமை (மாறாத) முறியாத நிலப்பரப்பையுடையது எனும் பொருள்பட 'இளமுறியாக் கண்டம்' என்று அழைக்கப் பெற்றது. இந்தத் தென் இமயமலையின் விண்முட்டிய பனிமலை முகடுகனில் பிறந்த தென்கங்கை, தென்யமுனை, தென் பிறம்ம புத்தரன், தென்பிறம்மபுத்திரன், தென் பிறம்ம புத்திறன், பஃறுளி, குமரி, தென் இந்து (சிந்து)... முதலிய பலபெரிய ஆறுகள் தான் இந்த இளமுறியாக் கண்டத்தை வளப்படுத்தின, இவற்றுள் 'குமரியாறு' ஒன்றுதான்; தென் இமய மலையில் தோன்றி இளமுறியாக் கண்டத்தின் வட எல்லைவரை ஓடிக் கடலில் கலந்தது. எனவே, இந்தக் குமரியாற்றின் பெயரால், இந்த இளமுறியாக் கண்டம் 'குமரிக் கண்டம்' என்ற சிறப்புப் பெயர் பெற்றது. இந்த இரண்டு பெயர்களாலுமே இந்து வேத நூல்களிலும், இந்துமத நூல்களிலும், மற்ற இலக்கிய, இலக்கண நூல்களிலும் இந்த முதல் நிலப்பரப்பு குறிக்கப்படுகிறது. பதினெண் சித்தர்களின் நூல்களிலும், நாற்பத்தெட்டு வகை சித்தர்களின் நூல்களிலும் 'இளமுறியாக்கண்டம்' என்ற பெயரே அதிகமாகப் பயன்படுத்தப்படுகின்றது.

இந்த இளமுறியாக்கண்டம் சூரியனின் கதிர்களைப்போல நாலாப்பக்கமும் எண்ணற்ற சிறிய, பெரிய நீண்ட நிலப் பகுதிகளைக் கடல்பரப்பின் ஊடே பாதைகள் அமைத்தது போல் பெற்றிருந்தது என்றும்; இப்பெரு நிலப்பரப்பு ஏழாயிரம்கல் விரிந்து கிடந்தது என்றும்; இப்பெருநிலப் பரப்பைச் சுற்றிப் பலதீவுகள் சிறியனவாகவும், பெரியனவாகவும் இருந்தன என்றும்; இப்பெரு நிலப்பரம்பில் (1) 'குறிஞ்சி' எனப்படும் 'மலையும் மலை சார்ந்த இடமும்' (2) 'முல்லை' எனும் 'காடும், காடு சார்ந்த இடமும்' (3) 'மருதம்' எனும் 'வயலும் வயல் சார்ந்த இடமும்' (சமதளப்பகுதி ஆற்றுப்படுகை, ஊற்றுநீர்வளம் உடைய வளமான நிலப்பகுதி... என்று இந்த மருத நிலம் பற்றிய விளக்கம்பல வழங்கப்படுகின்றன) (4) 'நெய்தல்' எனும் 'கடலும் கடல் சார்ந்த இடமும்' மீன்வளம் மிகுந்த கடற்கரைப் பகுதியும், உப்பு விளையும் பகுதியும்; கடற்கரைக் காடும், பயிர் விளையும் மணல் சாரியான நிலமும் சேர்ந்த பகுதி...என்று இந்த நெய்தல் நிலம் பற்றிய விளக்கமும் வழங்கப்படுகின்றன). பாலை எனும் 'வறண்ட நில்ப்பகுதியும், சிறிய சிறிய முட்புதர் பலவும், குட்டையான மரம் பலவும் மிகுந்த நிலப்பகுதியும்; இயற்கை

பின்சீற்றத்தால் நீர்வளம் குன்றிட்ட மலை, காடு முதலிய பகுதியும் சேர்ந்த இடமும்... என்று ஐந்து வகைப்பட்ட இயற்கை வள முடைய நிலப்பகுப்பு இருந்தது என்றும், இந்து வேத நூல்களனைத்தும், இந்துமத நூல்களனைத்தும் பழம் பெரும் மூன்று தமிழ்ச்சங்க நூல்களனைத்தும், குறிக் கின்றன. இப்படி, இளமுறியாக் கண்டத்து நிலப்பரப்பு பற்றிய பல்வகைப்பட்ட செய்தி யினை அறியும் வாய்ப்பு அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழி மூலம் கிடைக் கின்றது.

(8) 'இளமுறியாக் கண்டமெனப்படும். 'குமரிக்கண்டம்' ஏழாயிரம் கல் நீள அகலத் விரிந்து கிடந்தது. இதில் வானவில்லின் ஏழுவண்ணம்போல் மனித உடலமைப்பிலும், உடல் வண்ணத்திலும் மிகப்பெரிய அளவில் வேறுபாடு பல காணப்பட்டன.

அவ்வேறு பாட்டின் அடிப்படையில் ஏழு வகைப்பட்ட மனித இனத்தவர் பகுக்கப் பட்டு இருந்தனர். ஒவ்வோர் இனத்திலும் நுட்பமான வடிவமைப்பு வேறுபாடும், வண்ண வேறுபாடும் நோக்கப்பட்டு ஏழு வகையான உட்பிரிவினர் பிரிக்கப்பட்டிருந் தனர். ஆக மொத்தம் மானுடர் வடிவமைப் பாலும் உடல் வண்ண அமைப்பாலும் நாற் பத்தொன்பது இனத்தவராகப் பகுக்கப்பட்டு இருந்தனர்.

(இந்த இனப்பிரிவிவுக்குரிய வடிவமைப் பும் வண்ண அமைப்பும் ஒன்பது ப்ளஸ் பன்னிரண்டு ராசி ப்ளஸ் இருபத்தேழு விண் மீன்கள் என்ற மூன்றின் கூட்டுத் தொகைக் கேற்ப நாபத்தெட்டுடன், எதிலும் சேராத ஒரு பொதுவகை என்று ஒரு வகையும், ஆக மொத்தம் நாற்பத்தொன்பது வகையினர் என்று பிரித்துப் பட்டியலிடப் பட்டதாகவும், ஒரு குறிப்பு குரு பாரம்பரியம், இலக்கிய பாரம்பரியம், அரச பாரம்பரியம், என்ற மூன்று நூல்களிலும் காணப்படுகிறது.)

இந்த நாற்பத்தொன்பது வகைப்பட்ட மானுடரும், நாற்பத்தொன்பது என்ற எண்ணிக்கையில் தனி நாடுடையவராய் வளர்ந்தனர்.

ஆனால் அனைவருக்குமே அனாதிக் காலத்திலும், ஆதிக்காலம் எனப்படும் முதல் யுகத்திலும், அண்ட பேரண்டமாளும், பதி னெண் சித்தருடைய தாய்மொழியும்; அண்ட பேரண்டஅருளுலக ஆட்சி மொழி யுமான அருளூறு அமுத தெய்வீகச் செந் தமிழ் மொழிதான் தாய்மொழியாக இருந் தது. அதாவது பதினெண் சித்தர், நாற்பத் தெட்டுவகைச் சித்தர், நாற்பத்தெட்டு வகைப்பட்ட கடவுளர், நாற்பத்தெட்டு வகைப்பட்ட வழிபடுநிலையினர்... முதலிய பலரும் இளமுறியாக்கண்டம் முழுதுமிருந்த அனைத்து வகைப்பட்ட மானுடருக்கும், அருளூறு அமுத தெய்வீகச் செந்தமிழ் மொழியையே கற்றுக் கொடுத்து இளமுறி யாக் கண்டத்தவர் அனைவரும் தமிழரே என்றாக்கினர். இதனால் இளமுறியாக் கண்டமே 'தமிழகம்', 'தமிழ்நாடு', 'தமிழ் கூறு நல்லுலகு', 'தமிழ் வழங்கு நிலப் பரப்பு' 'தமிழ் நிலம்'... என்று குறிக்கப்பட லாயிற்று. இப்படி, இம்மணுலகின் முதல் பெரு நிலப்பரப்பு, தமிழ் மொழிக்கும் தமிழ ருக்குமுரியதாய் நாடாயிற்று. இவ்வாறா கவே ''தமிழரே இம்மண்ணுலகின் முதல் குடியினர்''; தமிழினமே இம்மண்ணுலகின் முதல் இனம்'', தமிழ்மொழியே இம்மண்ணு லகின் முதல் மொழி, மூலமொழி, தாய் மொழி'', ''தமிழகமே மனித நாகரிகத்தின் தொட்டில்,'' ''தமிழ்ப் பண்பாடே உலக மானுடப் பண்பாட்டின் மூலம், ஆதாரம், அடிப்படை, கரு''... என்று சிறப்பிக்கப்படும் நிலை உருவாயிற்று.

(9) அண்ட பேரண்டமாளும் பதினென் சித்தர், இம்மண்ணுலகின் பல பகுதிகளில் இயற்கையாகப் பயிரினமும், உயிரினமும் பல்வேறு வகையுடையனவராகத் தோன்றி யதுபோல்; மானுடரும் உலகம் முழுதும் தோன்றினர் என்ற பேருண்மையையும்; இம்மானுடர், (ஆரம்பகாலத்தில் இம்மண் ணுலகப் பயிரின் உயிரின வகையனைத்துக் கும்தலைவராகவே மண் = மண்ணுலகத்தவர் ஈசர்—தலைவர் — (மண் + ஈசர் = மணீசர்) வாழ்ந்து 'மணீசர்' என்று பெயர் பெற்ற னர். அவர்களை மனதையும், சிந்தையை

யும் உடைய மனிதராக மாற்றுவதற்கே இந்து வேதம் வழங்கப்பெற்றது.

(1) ''இந்த இந்துவேதமே இவ்வுலகின் முதல் வேதம், மூலவேதம், ஆரம்ப வேதம், ''தாய் வேதம்'' (2) ''இந்த இந்து வேதமே இம்மண்ணுலகம் முழுதும் தோன் றிட்ட, தோன்றுகின்ற தோன்றக் கூடிய மானுட இனத்தார் அனைவருக்கும் பொது வானதாக வழங்கப்படுகின்றது. (3) ''இந்த இந்து வேதமே உலகம் முழுதும் தோன்றுகின்ற மானுட இனத்தவர் அனை வர்க்கும் விடுதலை வாழ்வும், மானுட மொழி அனைத்துக்கும் விடுதலை வாழ்வும்; மானு டர் உருவாக்கும் நாடு அனைத்துக்கும் விடுதலை வாழ்வும் உருவாக்கித் தரவல் லது" (4) ''இந்த இந்து வேதமே, உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொது வுடைமைக் கூட்டுறவுச் சமுதாயத்தை உரு வாக்கிட வல்லது'' (5) இந்த இந்து வேதமே, உலக ஆன்ம நேய ஒருமைப் பாட்டை உருவாக்க வல்லது'' (6) ''இந்த இந்து வேதமே கடவுளப அனைவரும் அடிக் கடி மனிதரைச் சந்திக்க வந்து மனிதருக்கு உதவும்படிச் செய்கிறது" (7) இந்த இந்து வேதமே விரும்புகின்ற மனிதர் அனைவரும் கடவுளரனைவரை சந்திக்க உதவுவதோடு, மனிதரனைவரும் கடவுளர் அனைவரையும் சந்திக்க உதவுவதோடு; மனிதரனைவரும் கடவுளாரகவே மாறிடுவதற்கு உதவு கிறது.'' (8) ''இந்த இந்து வேதமே கடவுளருக்கும் மனிதருக்குமிடையே நல்ல உறவும், நட்பும் தோழமையும் செழித் தோங்கச் செய்கிறது'' (9) ''இந்த இந்து வேதம் தான் இம்மண்ணுலகின் நிலப்பரப்பு நீர்ப்பரப்பாகியும்; நீர்ப்பரப்பு நிலப்பரப்பாகி யும் தோன்றக் கூடிய புதிய புதிய இனத் தவர் அனைவர்க்கும் உதவுதற்காகக் கோடிக்கணக்கில் கடவுளரை இம்மண்ணுல கிற்கு அண்ட பேரண்ட மனைத்திலுமிருந்து வரவழைத்தும்; இம்மண்ணுலகிலேயே கோடிக்கணக்கான கடவுளர் தோன்றுவதற் கும் தொடர்ந்து ஏற்பாடு செய்திடும் ஆற்ற லையும், வழி வகையையும் பெற்றிருக்கின் றது. ( 0) ''இந்துவேதமே அருவக்கடவுளர் அருவுருவக்கடவுளர், உருவ அருவக் கடவு ளர், உருவக்கடவுளர் என்று நான்கு வகை யான வடிவமைப்புடைய கடவுளரையும் மானுடருக்கு அறிமுகப் படுத்தி; அருளுல கில் நல்ல உறவு நிலையும், உரிமை நிலை யும் தொடர்ந்து நிகள்ந்திடச் செய்கிறது. (11) ''இந்த இந்து வேதமே, கடவுளர் காலம் தோறும் கணக்கற்றுப் பிறக்கின்ற னர் என்ற பேருண்மையினை விளக்கிக் கடவுளரின் பெயராலோ! அல்லது வேதத்தி தின் பெயராலோ! அல்லது வேதத்தின் செயல்வடிவான மதத்தின்பெயராலோமானு டரிடையே பிரிவினையோ! வேற்றுமையோ போட்டியோ! பொறாமையோ! பகை மையோ! சண்டைச் சச்சரவோ! அழிவுக் குரிய போரோ!... நிகழ்த்து விடாமல் தடுக் கிறது''. (12) ''இந்த இந்துவேதம்தான், ஒவ்வொரு குடும்பத்தவரும், அவரவரின் குடும்பத்தைச் சேர்ந்த முன்னோரில் பட்ட வர், ஆண்டவர் என்ற நிலை பெற்றோரைப் போற்றிப் பணிந்தாலேயே போதும்; அவர்க்கு, எல்லா வகையான நலமும், வள மும் வலிவும். பொலிவும், வாழ்வியல் பேறும் சித்தித்திடுா' என்று வழிகாட்டுகிறது."

(13) ''இந்த இந்து வேதம் தான், ஒவ் வொரு குலத்தவரும், அவரவரின் குலத்தைச் சேர்ந்த முன்னோரில் தெய்வ நிலை பெற் றோரைப் போற்றிப் பணிந்தாலேயே போதும்; அவர்க்கு, எல்லாவகையான நலமும், வளமும், வலிவும், பொலிவும் வாழ்வியல் பேறும் சித்தித்திடும்' என்று வழி காட்டுகிறது. (14) ''இந்த இந்து வேதம்தாம் தான்.

(14) ஒவ்வொரு கிராமத்தாரும் அவரவரின் கிராமத்தில் உள்ள தேவர், தேவதை அனை வரையும் போற்றிப் பணிந்தாலேயே போதும்; அவர்க்கு எல்லா வகையான நலமும், வளமும், வலிவும், பொலிவும், வாழ்வியல் பேறும் சித்தித்திடும்.' என்று வழிகாட்டுகிறது.

(15)''இந்த இந்து வேதம்தான், ஒவ்வொரு நாட்டாரும் அவரவரின் நாட்டுக்குரிய கடவுளர் அனைவரையும் போற்றிப் பணிந் தாலேயே போதும்; அவர்க்கு எல்லா வகை யான நலமும், வளமும், வலிவும், பொலி வும் வாழ்வியல் பேறும் சித்தித்திடும்'' என்று வழிகாட்டுகிறது.

# சித்தர் இராமாயணம்

ஞானாச்சாரியாரின் அறிவுரைகளிலிருந்து தொகுத்தவர்கள் :

1. அருள்மிகு சித்தர் உருத்திர தேவர் ச. துரைராசன் B.Sc.,
2. அருள்மிகு சித்தர் முத்தீசர் வெ. செகதீசன் B.Sc.,
3. அருள்மிகு தாயுமானவர் சன்னிதானம் ம.சி. இராமன்
4. அருள்மிகு அனாதி சங்கராச்சாரியார் பீடம் பாபநாசம் நாகேசு,

இந்து மதம் 'இராமாயணம்', 'மகாபாரதம் என்ற இரண்டு மாபெரும் காப்பியங்களால் அழகு பெற்றிருக்கிறது. விளக்கம் பெற்றிருக்கிறது; எனவே, இன்றைக்கு இவையிரண்டும் பற்றியும் பதினெண் சித்தர்களுடைய பாரம்பரியத்தில் தொடர்ந்து காலங்கள் தோறும் தோன்றுகின்ற பதினென் சித்தர்களும், பதினெண் சித்தர் பீடாதிபதிகளும், நாற்பத்தெட்டு வகை சித்தர்களும் குறிந்து சென்றுள்ள குறிப்புகள்தான் சிறந்த பயனை அளிக்க முடியும். ஏனெனில், இந்தியத் துணைக் கண்டம் முழுவதும் வால்மீகி இராமாயணத்தை அடிப்படையாகக் கொண்டு எழுந்த துளசிதாசர், போதாயனர், வாத நாராயணர், கம்பர், புலவர் குழந்தை— முதலிய பலரின் இராமாயணங்கள்தான் நன்கு அறிமுகமாகியிருக்கின்றன.

இவையெல்லாம் மிகுந்த கதைப் போக்குகளையும் கற்பனைப் போக்குகளையுமே பெற்றிருக்கின்றன; ஆனால், இவைகளுக்கெல்லாம் ஆரம்பமாக மூலமாக, முதலாக, கருவாக, தாயாக பதினெண் சித்தர்களின் 'இராமயாணம்', 'இராமகாதை', 'இராவண காதை', 'இராவணன் நீதி', 'சீதை நீதி' 'சனகர் அறம்', 'தசரதன் அறம்', 'வண்டமர் குழலி (மண்டோதரி) புலம்பல்'... என்று பெயரிடப்பட்டுக் குறிக்கப்படும் அறுபது நூல்கள் இருக்கின்றன. இவற்றின் அடிப்படையில்தான் பிற்காலத்தே பலரும் இராமாயணத்தைக் கதைகளாக, கவிதைகளாக, காவியங்களாக எழுதினர்.

2. முதல் யுகம் முழுமையாக குமரிக் கண்டத்தில் நிகழ்ந்த ஒன்றாகும். இரண்டாவது யுகம் முடியும் நிலையில் கங்கைக் கரையில் நிகழ்ந்த வரலாற்று நிகழ்ச்சிதான் இராமாயணம்.

(3) 'உண்மைகள் சில சமயங்களில் கசப்பாகத்தான் இருக்கும்' என்ற முதுமொழிக்கேற்ப யக்ஞவல்லியரின் இராமரயணத்தில் சீதை, வண்டமர் குழலி (மண்டோதரி) இராமன், கைகேயி... இவர்களைப் பற்றிக் கூறும் உண்மைகள் கசப்பாக இருந்தாலும் உண்மை அதுவே, யக்ஞவல்லியரின் சித்தர் இராமாயணத்திலிருந்து ஒரு சில செய்திகளை இங்கு குறிப்பிடுகிறோம்.

(4) இரவணனின் மனைவியான வண்டமர் குழலி (மண்டோதரி] தேவேந்திரனின் மகள் என்ற செய்தி சித்தர் இராமாயணத்தில் குறிக்கப்படுகிறது. அத்துடன், மலர்களை வண்டுகள் மொய்ப்பது போல் அவளுடைய கூந்தலின் நறுமணத்திற்காக வண்டுகள் அவளுடைய கூந்தலை மொய்ப்பது வழக்கம். அதனாலேயே அவளுக்கு 'வண்டமர் குழலி' என்ற சிறப்புப் பெயர் நிலைத்தது, அவளுக்கு தேவேந்திரன் வைத்த பெயர் 'அமுத மொழி' அவள் சிறந்த சிவநேசச் செல்வி.

(5) யக்ஞவல்லியரின் 'சித்தர் இராமாயணம்' மிகத் தெளிவாக இராவணனுடையமகள் தான் சீதை என்ற பேருண்மையை விளக்குகின்றது.

அதற்கேற்ப சித்தர் இராமாயணத்தில் பல நிகழ்ச்சிகளும் பல உரையாடல்களும் இடம் பெற்றிருக்கின்றன. சீதையின் சுயம்வரத்தற்கு இராவணன், தானும் செல்லப்போவதாக தன்னுடைய குருவாகிய யக்ஞவல்லியரிடம் கூறியபோது; யக்ஞவல்லிக்கும்இராவணனுக்கும் இடையே நடந்த உரையாடல்கள் சீதை இராவணனின் மகள்தான் என்ற பேருண்மையை விளக்குகின்றன.

(6) சுயவரம் நடந்து முடிந்தபின் இராமனுக்கும் சீதைக்கும் திருமணம் இனிதே நடக்கின்றது. பின் இராமர் சீதையுடன் அயோத்தி திரும்புகின்றார். வழியில் அரசகுலத்தையே அழித்து விடுவதாக சபதம் எடுத்திருந்த பரசுராமருடன் போர்புரிய நேரிடுகின்றது. இதையறிந்த இராவணன் எங்கே தன் மருமகனுக்கும், மகளுக்கும் ஆபத்து ஏற்பட்டு விடுமோ என்று எண்ணி போர்க்கோலம் பூண்டு பரசுராமருடன் போர் புரியத் தயாராகின்றான். அப்பொழுது இராவணனின் குருவாகிய 'யக்ஞவல்லியர்' இராவணனிடம் 'சீதை உன் மகள்தான் என்று உலகறிய நீ ஏன் அறிவிக்கவில்லை என்று கேட்கின்றார். அதற்கு இராவணன், தன் மகளுக்கு வாரிசு உண்டானபின் 'உலகறிய சீதை தன் மகள் தான்' என்று அறிவிக்கப் போவதாகச் சொன்னான் என்பதை யக்ஞவல்லிரின் இராமாயணத்தால் அறியமுடிகின்றது.

7. அயோத்தியில் இராமனும் சீதையும் வந்து அரண்மனையில் இல்வாழ்க்கை நடத்துகின்றனர். இராமனின் சிற்றன்னையான கைகேயிதான் அங்கவியல் சாத்திரங்களின்படி சீதை அரக்கர் குலத்தைச் சேர்ந்தவள், அரச குலத்தைச் சேர்ந்தவள் அல்லள் என்பதைக் கண்டுபிடிக்கிறாள். எனவே, கைகேயி எங்கே இருவரும் இல்வாழ்க்கையில் ஈடுபட்டு அரச குடும்பத்திற்கு வாரிசு உண்டாகிவிடுமோ என்று பயந்து, திட்டமிட்டே இராமனையும், சீதையையும் பதினான்கு ஆண்டுகள் காட்டிற்கு அனுப்புகின்றாள். எங்கே காட்டில் இல்வாழ்க்கை நடத்தி வாரிசு உண்டாகிவிடுமோ என்று பயந்து அஞ்சி, அவர்கள் இல்லற இன்பம் துய்த்து வாழ்வதைத் தடுப்பதற்காகவே, அவர்களை மரவுரி ஆடை அணிந்து தவ வாழ்க்கை மேற்கொள்ளும்படியும் ஆணையிட்டாள். அதற்குரிய உறுதி மொழியையும் வாங்கிக் கொண்டாள். இச் செய்தியினை யக்ஞவல்லியர் தமது சித்தர் இராமாயணத்தில் குறித்துள்ளார்.

(8) யக்ஞவல்லியர் நமது சித்தர் இராமாயணத்தில்; அசோக வனத்தில் இருந்த சீதையை அடிக்கடி தாம் சென்று பார்த்தது பற்றியும்; அசோக வனத்தில் சீதை மிகவும் மகிழ்ச்சியாக இருந்தது பற்றியும் குறிப்பிடுகின்றார். அப்படி, அவர் சீதையின் மகிழ்ச்சி பற்றி குறிப்பிடும்போது, சீதை, வளர்ப்பு இடமான சனகாபுரியிலும்; திருமணம் புரிந்து வாழச் சென்ற இடமான அயோத்தியிலும் வாழ்ந்ததைவிட, மகிழ்ச்சியாக தன்னுடைய தந்தையான இராவணனின் தலை நகரில் அசோகவனத்தில் இருந்தாள் என்று குறிப்பிடுகின்றார். மேலும், சீதை சில சமயங்களில் 'கோடை வெய்யிலில், வாடிய பயிர் போல் இருந்தாள் என்றும்; தந்தை வீட்டில் அனைவரும் காட்டிய அன்பு மழையில் சில சமயங்களில் 'பருவமழை பெற்ற பயிர்போல் இருந்தாள்' என்றும் தன்னுடைய குடியிருப்புகளில் யக்ஞவல்யலிர் குறிப்பிடுகிறார். — (தொடரும்)

# கேள்வி - பதில்

பரமாச்சாரியார், பெரியவாள், ஏமக்கோடிப்பீடம் இரா. சீனிவாசன்

[ஆன்மீகப் பெருமக்களே! பத்தியாளர்களே! இளைஞர்களே! இந்து வேதம், இந்து மதம், பூசை, தவம், வழிபாடு,... பற்றிய தங்களது ஐயங்களை, ஞானாச்சாரியார், அம்பத்தூர், சென்னை-53 என்ற முகவரிக்கு, அஞ்சலட்டையில் எழுதிக் கேட்டால், இந்த கேள்வி-பதில் பகுதியில் உரிய விளக்கம் தரப்படும். தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பான கேள்வியை கேட்டவர்களுக்கு, பதினெண் சித்தர் மடத்தில் சிறப்புப் பூசைகள் செய்யப்பட்டு திருநீறு, குங்குமம் அனுப்பி வைக்கப்படும்.]

**1. கேள்வி :**

கோயிலுக்குப் போய் சாமி கும்பிட்டால் தான் கடவுள் அருள் கிடைக்குமா? வீட்டிலேயே கும்பிட்டால் கிடைக்காதா?

இல. க. கணேசன், வேம்படிதாளம்

பதில் :

பள்ளிக்கூடத்திற்குப் போனால்தான் அறிவு வருமா? என்று கேட்பது போலிருக்கிறது உங்கள் கேள்வி "பக்தியோடு, எங்கிருந்து பூசை செய்தாலும் அருள் கிடைக்கும்" என்று அசுர வேகத்தில் (காண்டம்-21 வாக்கியம்-36) கூறப்பட்டிருக்கிறது.

**2. கேள்வி :**

திருநீற்றை சிலர் நீரில் குழைத்துப் பூசுகிறார்கள்! சிலர் நீரில் குழைக்காமல் அப்படியே பூசுகிறார்கள்? எது சரியானது?

பதில் :

திருநீற்றை நீரில் குழைத்துத்தான் பூசவேண்டும். ஏனென்றால், "திருநீற்றுக்கு தண்ணீர் விட்டு உகிருட்டித்தான் பூசவேண்டும்" என்று இருக்கு வேதம் (காண்டம்-48 வாசகம்-9) கூறுகிறது.

**3. கேள்வி :**

உருத்திராக்கத்தை எல்லோரும் அணியலாமா?

பதில் :

உருத்திராக்கம் என்றால் "உத்திரர் ப்ளஸ் ஆக்கும் உருத்திராக்கம்". அதாவது, "மனிதரை கடவுளாக்க உதவுவது உருத்திராக்கம்". எனவே, எல்லோரும் உருத்திராக்கம் அணியலாம். (அதர்வன வேதம் காண்டம்-36 வாசகம்-12)

**4. கேள்வி :**

சிவனுக்கு மட்டும் பெரும்பாலும் எல்லா கோயில்களிலும் இலிங்க வடிவமே வைத்திருக்கிறார்கள் ஏன்?

பதில் :

நம் ஒவ்வொருவருக்குள்ளும் ஆவி, ஆன்மா, ஆருயிர் என்று மூன்று உண்டு. இந்த மூன்றும் இறுதியாகச் சென்றடையும் முழு முதற்பொருள் சிவன். அதாவது இந்த மூன்றின் இணைந்த வடிவமே இலிங்கம்.

ஆவி-அடிபபாகம்
ஆன்மா-ஆவுடையார்
ஆருயிர்-அம்பு (பாணம்) யாமவேதம் காண்டம்-27 வாசகம்-12

**5. கேள்வி :**

சில கோயில்களில் பெண்கள் அர்ச்சகர்களாக இருககிறார்களே அது சரியா?

பதில் :

சரியே. யாம வேதத்தில் காண்டம்-

# அருளுலக ஆச்சாரியார்கள் பாரம்பரியம்

1. அருள்மிகு ஆத்தாள் தேவி உலகச் சுடலைகளின் தலைவி திருச்சிராப்பள்ளி ஓயாமெரி சுடலை பத்திரகாளி ஆதினம் சத்தி விரத ஞானி, சித்தரடியார், த. செயக்குமார் B. Tech

2. அருள் மிகு குருமார் வெங்கடேசன்

3. அருள்மிகு அள்ளூர் சுடலை ஆண்டிச்சி பீடாதிபதி அ. சுந்தரமூர்த்தி

அருளுலகம் என்பது 108, திருப்பதி அண்டங்கள், 243, சத்தி பீட அண்டங்கள், 1008 சிவாலய அண்டங்கள் என்று ஆக மொத்தம் 1359 அண்டங்களிலும் விரிந்து பரந்து கிடக்கின்ற ஒன்றாகும். இந்த அளவு விரிந்து பரந்து மிகப் பெரிய அளவினை உடைய அருளுலகத்தைப் பெற்றிருப்பது இந்துமதம் மட்டும்தான்! இந்து மதம் மட்டும்தான்!! இந்துமதம் மட்டும் தான்!!!

அதாவது இந்து மதத்தை நடைமுறைப் படுத்தித் தருகின்ற இந்து வேதத்தில்; "இந்த இந்து வேதத்தை வழங்குகின்ற, (அ) அருளுகின்ற பதினெண் சித்தர்கள்; 1359 அண்டங்களிலும், அருளாட்சி நிகழ்வதற்காக வழங்கிய (அ) வழங்கிடும் பொது வேதமே இந்த இந்து வேதம்" என்று கூறியுள்ளார்கள், கூறுகிறார்கள் என்ற குறிப்பு இருக்கிறது. இப்படி இந்த உலகில் வேறு எந்த வேதத்திலும் (அ) வேறு எந்த வேத மதத்திலும் கருத்தில்லை, செய்தியில்லை! கருத்தில்லை, செய்தியில்லை!! கருத்தில்லை!!! இதுதான் இந்து வேதத்தின் தனிப்பட்ட சிறப்பு, உரிமை; இந்து மதத்தின் தனிப்பட்ட சிறப்பு, பெருமை.

இந்த இந்து வேதம் ஒன்றுதான்; "இந்த மண்ணுலகில், தோன்றக்கூடிய (அ) தோற்றுவிக்கப்படக் கூடிய எந்த ஒரு வேதமானாலும் சரி (அ) எந்த ஒரு வேத மதமானாலும் சரி; அவை இந்துவேதம் எனும் ஆலமரத்தின், (அ) இந்து வேதமதம் எனும் ஆலமரத்தின் இலையாகவோ!, பூவாகவோ!, காயாகவோ!, கனியாகவோ!, கொப்பாகவோ!, கிளையாகவோ!, விழுதாகவோதான் இருக்க முடியும்! இருக்க முடியும்! இருக்க முடியும்!!!" என்று அழுத்தந் திருத்தமாக, ஆணித்தரமாக, அறுதியிட்டு உறுதியாகக் கூறுகிறது! உறுதியாகக் கூறுகிறது!! உறுதியாகக் கூறுகிறது!!! எனவே தான், இதே இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்கும் உரிய முழு முதல் தலைமைக் குருபீடம், 'குவலய குருபீடம்' என்றும்; இந்தக் குருபீடத்தின் குருதேவர் 'ஞால குரு' என்றும், இதன் ஆச்சாரியார் 'ஞானாச்சாரியார்' என்றும், இதனுடைய ஆதினம் 'கருமூல ஆதினம்' என்றும், இதன் தம்பிரான் 'அனாதி ஆதி கடந்த தம்பிரான் அடிகளார்' என்றும், இதன் சன்னிதானம் 'குரு மகா சன்னிதானம்' என்றும்...இம்மண்ணுலகம் முழுவதற்கும் தலைமை தாங்குபவர் என்ற பொருளில் அமைந்திருக்கின்றன.

'ஞானாச்சாரியார்' எனப்படும் இந்து வேத, இந்து மத ஞானத்துக்கு மட்டுமன்றி, இம்மண்ணுலகில் பொதுவாக 'ஞானம்' என்ற சொல் குறிக்கக் கூடிய அனைத்திற்கும் ஆச்சாரியாராக இந்த இந்து வேத

இந்துமத ஆச்சாரியார்தான் 'ஞானாச்சாரியார்' என்றச் சிறப்புப் பெயரை உரிமையோடும், பெருமையோடும் பெற்றிருக்கின்றார்.

இந்த மண்ணுலகம் முழுவதற்கும் உள்ள அருளுலகத்தின் முழு முதல் தலைவரான ஞானாச்சாரியார் முறையாக, அருளாட்சி செய்வதற்காக எண்வகை ஆச்சாரியார்களையும், ஆறுவகை சடங்கியல் வல்லார்களையுல், பதினான்கு வகைப்பட்ட அருட்கலைஞர்களையும் உருவாக்கிச் செயல்படுகின்றார், இப்படி முறையான நிறுவன நிர்வாக அமைப்புகளை உண்டாக்கிச் செயல்படக்கூடிய வேறு ஒரு வேதமோ, வேதமதமோ இந்த உலகில் இதுவரை தோன்றியதில்லை! தோன்றியதில்லை!! தோன்றியதில்லை!!! தோன்றியதேயில்லை!!! இனியும் தோன்ற முடியாது! தோன்ற முடியாது!! தோன்ற முடியாது!!! தோன்றவே முடியாது!!! இதுதான் இந்து வேதத்துக்கும், இந்து மதத்துக்குமுரிய தனிப்பட்ட சிறப்பு உரிமையாகும், பெருமையாகும்.

இந்து மதத்தின், இந்து வேதத்தின் எண்வகை ஆச்சாரியார்கள் :

1. ஆதி ஈசுவர ஆச்சாரியார் (இல்லறத்தில் வாழ்பவர்) 2. ஈசுவர் ஆச்சாரியார் (துறவறத்தில் வாழ்பவர்) 3. ஆதி சிவாச்சாரியார் 4. சிவாச்சாரியார் 5. ஆதி பரமாச்சாரியார் 6. பரமாச்சாரியார் 7. ஆதி சங்கராச்சாரியார் 8. சங்கராச்சாரியார்

ஆறுவகைப்பட்ட சடங்கியல் வல்லார்கள் : 1 அத்திரியார் 2 சாத்திரியார் 3 சூத்திரியார் 4 தோத்திரியார் 5 நேத்திரியார் 6 வேத்திரியார்

பதினான்கு வகைப்பட்ட அருட்கலைஞர்கள் : 1 பத்தர் 2 பத்தியார் 3 புத்தர் 4 புத்தியார் 5 போத்தர் 6 போத்தியார் 7 முத்தர் 8 முத்தியார் 9 சீவன் முத்தர் 10 சீவன் முத்தியார் 11 அருவ சித்தியார் 12 அருவுருவ சித்தியார் 13 உருவ அருவ சித்தியார் 14 உருவ சித்தியார்

(தொடரும்)

(அருளுலக ஆச்சாரியார்கள் பாரம்பரியம் பற்றி தொடர்ந்து சத்தி விரத ஞானி எழுதுவார்)

[9-ம் பக்கம் பார்க்க]

வாக்கியம்-48-இல் குழந்தை, சிறுவர், இளையோர், நடுத்தர வயதினர், பெரியோர், ஆன், பெண் என்று எந்த வேறுபாடுமின்றி, அருட்சினையாளர்களை இந்து வேத பாடசாலையில் தயாரிக்க வேண்டும்'' என்று கூறப்பட்டிருக்கிறது.

6. கேள்வி :

கடவுள்களுக்கு பெரிய பெரிய கோயில்கள் தேவைதானா? சிறிய கோயில்கள் போதாதா?

பதில் :

யாம வேதத்தில் காண்டம்-3; வாக்கு-5 இல் ''அருள் ஊற்றெடுக்கும் நிலம் முழுவதும் கோயில் வளாகமாக ஆக்கப்படல் வேண்டும்'' என்று கூறப்பட்டிருக்கிறது. என்வே, கோயில் சிறியதாகவோ பெரியதாகவோ அமைக்கப்படுவது அருள் ஊற்றெடுக்கும் நிலப்பரப்பைப் பொறுத்ததே ஆகும். இவை பற்றிய விளக்கம் கருதி, ஆரணம், ஆகமம், மீமாம்சை முதலியவற்றில் விரிவாகக் காணப்படுகிறது.

7. கேள்வி :

கடவுளுக்கு பழங்கள், சர்க்கரைப் பொங்கல்...என்று படையலட்டுத்தான் பூசை செய்ய வேண்டுமா? எதைப் படைக்கலாம்? எதையெதைப் படைக்கக் கூடாது?

பதில் :

இருக்கு வேதத்தில் (காண்டம்-1; வாக்கியம்-9; வாசகம்-18) ''பூசை செய்ய விரும்புகிறவர்தான் விருப்பமாக உண்ணுகிற உணவை படையலாகப் படைத்துத்தான் பூசை செய்ய வேண்டும்'' என்று கூறப்பட்டிருக்கிறது

இறைச்சியும், மீனும், கிழங்கும் காயும் வேறுவேறு என்போர் வேருவர் பொன்னும் ஓடும் ஒக்கவே நோக்கும் அருளாக்கம் பெருரிவர்.

# இந்து என்ற சொல்லின் பொருள் விளக்கம்

ஞானாச்சாரியாரின் அருளுரைகளிலிருந்து தொகுத்தவர்கள்

1. அருள்மிகு சித்தரடியார் கணபதி அடிகளார்
2. அருள்மிகு சித்தரடியாள் கார்த்தியாயினி செகதீசன்
3. அருள்மிகு சித்தரடியாள் மல்லிகா லோகநாதன்
4. அருள்மிகு சித்தரடியாள் சந்திரா நடராசன்
5. அருள்மிகி பாரதகால பரிமளகந்தி திருத்தோன்றல் சாந்தி துரைராசன்
6. அருள்மிகு சித்தரடியாள் பௌர்ணிமாதேவி சேவன்
7. அருள்மிகு சித்தரடியாள் தேவி விசாலாட்கி கணேசன்
8. அருள்மிகு சித்தரடியாள் அமிர்தகனி வேதநாயகம்
9. அருள்மிகு சித்தரடியாள் சத்தி வடிவு கணபதி
10. அருள்மிகு சித்தரடியாள் இரசேசுவரி பாலுச்சாமி
11. அருள்மிகு சித்தரடியாள் காமாட்சி நக்கீரன்
12. அருள்மிகு சித்தரடியார் மாணிக்கம்

## i இந்து என்ற சொல்லுக்கு

1. அன்பு, 2 அழகு, 3 அமுது, 4. அருள், 5. அடக்கம், 6. அந்தமில், இன்பம் 7. அமைதி 8. அரியது 9. அளப்பரியது 10. அடைதற்கரியது 11. அந்தம் கடந்தது 12. அச்சமகற்றும் அருமருந்து 13. அக்கறை 14. அடைக்கலம் 15. அனாதி 16. அனாதி கடந்த கதி 17. ஆர்வம் 18. ஆதங்கம் 19. ஆற்றலின் வடிவம் 20. ஆக்கம் 21. ஆதரவு 22 ஆதி 23 அறிவு...என்று பொருள்.

## ii இந்து என்ற சொல்லுக்கு

1. இயற்கை 2. இசைவு 3. இயக்கம் 4. இரக்கம் 5. இச்சை 6. ஈவு 7. ஈர்ப்பு 8. ஈதல் 9. ஈகை 10. ஈரம் 11. இயற்கையறிவு என்று பொருள்

## iii இந்து என்ற சொல்லுக்கு!

1. உயிர் 2. உயர்வு 3. உய்வு 4. உய்த்துணர்வு 5. உறவு 6. உண்மை 7. உரிமை 8 உங்சாகம் 9. உட்கிடக்கை 10. உழைப்பு 11. உலகம் 12. உள்ளொளி 13. உருத்திரன் 14. உகயுகம் 15. உரமே 16. உடன்பாடு 17. உந்து சக்தி 18. உதவி 19. உவா 20. உடுக்கை 21. ஊரான் 22. ஊழி கடந்தது 23. ஊற்றுக் கண் 24. ஊக்கம் 25. ஊர்த்தவத் தாண்டவம்...என்று பொருள்

### iv இந்து என்ற சொல்லுக்கு!

1. எளிமை 2. எச்சம் 3. எதம் 4. எந்தை 5. எல்லா 6. எக்காளம் 7. எதிர்காலம் 8. எம்மான் 9. எம்பிரான் 10. எழுந்தருளி 11. எல்லாவற்றுள்ளும் உள்ள அருளணு 12. எங்கும் காணக் கிடக்கும் அருளணு 13. எதையும் கடவுளாக்கும் ஆற்றல் 14. எவரும் கடவுளாகிட உதவும் வழி 15. வழிகாட்டி 16. வழித்துணை 17. வழிப் பயன் 18. எண்டிசைக் காவல் சத்தி 19. எல்லா உயிர்களும் உய்ய அருளும் கடவுள் 20. எழிலார் சோலை 21. எய்தற்குரிய அருளாண்டகை 22. எஞ்ஞான்றும் ஒளிபரப்பும் எரிசுடர் 23. ஏகன் 24. ஏகம்பன் 25. ஏரிலார் செல்வம் 26. ஏருதற்கரிய பெருநிலை 27. ஏக்கமறுக்கும் அருமருந்து 28, ஏடு 29. ஏட்டுலக எழுத்து 30. எண்ணம் ...என்று பொருள்.

### v இந்து என்ற சொல்லுக்கு!

1 ஏசாச் செல்வம் 2. ஏதுக்களின் வடிவம் 3. ஏதிலாக் காவலன் 4. ஏதமகற்றி ஆட்கொள்ளும் கடவுள் 5. ஏற்றங்கள் அனைத்தும் வழங்கும் ஏந்தல் 6. ஏனென்று கேட்காமல் எல்லா வழங்கும் அருட்கொண்டை வள்ளல் 7. ஏந்தெழிலோன் 8. ஏந்தாரை ஏம் ஏந்துவோன் 9. ஏவுவாரில்லா ஏவலோள் 10. ஏழைப் பங்காளன் 11, ஏழையின் தோழன் 12. தொண்டன் 13, காவலன் 14. ஏழிசை 15. ஏழிசைப் பயன் 16. ஏனம் பட்டியான் 17. ஐயன் 18. ஐயா 19. ஐந்தவித்தான் 20. ஐம்புலன் கடந்தான் 21. ஐம்பூத மானவன் 22. ஐந்தெழுந்து 23. ஐந்தெழுந்தின் ஆற்றல் 24. ஐயமகற்றும் அருட் பெருஞ்சோதி...என்று பொருள்.

(தொடரும்)


## வேண்டுகோள்

வாசகர்களுக்கு ஓர் வேண்டுகோள். இந்து ஆரணத்தை படித்துவிட்டு சும்மா இருந்து விடாமல் நிறை, குறைகளை எமக்கு கடிதம் மூலம் தெரிவி யுங்கள்.

அத்துடன் ஆன்மீக வரலாறு உண்மைகளை தக்க ஆதாரத்துடன் தாங்கள் புகைப்படத்துடனும், எழுதி அனுப்ப வேண்டுகிறோம். தேர்ந் தெடுத்த கட்டுரைக்கு தக்க சன்மாணம் வழங்கப்படுவதும் இந்து ஆரணத்தில் வெளியிடப்படும். உடனே எழுதி அனுப்புங்கள்.

இப்படிக்கு,

ஆசிரியர்





# பதினெண் சித்தர்கள் அருளிய காயந்திரிகள்

மந்தரம், மந்திரம், மந்திறம், மாந்தரம், மாந்தரீகம். இந்த ஐந்தினையும் அவரவர் ஆர்வத்துக்கும், வசதி வாய்ப்புக்களுக்கும் ஏற்ப ஒன்றன் பின் ஒன்றாகக் கற்றுக் கொள்ளலாம்.

ஏதேனும் ஒரே ஒரு காயத்திரியை மட்டுமே கூட அன்றாடம் 108 முறை ஓதிப் பயிற்சி செய்தாலே போதும். ஒவ்வொரு நாள் ஓதுவதற்கும் பயன் உண்டு. ஓத முடியாமல் போகின்ற நாட்களுக்கும் சேர்த்து முன் கூட்டியோ, பின்னரோ ஓதிடலாம். ஆனால் அன்றாடம் குறைந்தது எட்டு முறையாவது காலையிலோ, மாலையிலோ ஏதேனும் ஒரு காயந்திரியையாவது ஓத வேண்டும்.

காயந்திரியை எந்த அளவு ஒரு நாளில் அதிகமாக ஓதுகிறார்களோ அந்த அளவிற்குப் பயனுண்டு. [ஆவி, ஆன்மா, ஆருயிர் நலம், உடல் நலம், உள நலம், உலகியல், வாழ்வியல் நலங்கள் அனைத்தும் கிடைக்கும்.

## செய்முறை :

1. உடை : கட்டாயமாக இருப்பில் கட்டும் வேட்டி முழங்காலுக்கு மேல் இருக்கும் வண்ணம் சுருக்கியோ, மடித்தோ வைத்துக் கொள்ளப்பட வேண்டும். இடுப்பிற்கு மேல் எந்தத் துணியும் இருக்கக் கூடாது. பெண்கள் முழுமையான ஆடையுடன் (ஈர உடை அல்லது துவைத்து உலர்ந்த ஆடை) ஓதலாம். ஈரத் துணியாக இருந்தால் அதற்கெனத் தனிப் பயன் உண்டு.

2. மெய்ச் சுத்தம் : நீராடி முடித்தவுடன் செய்தல் மிகச் சிறந்தது; அல்லது முகம், கை, கால்களைக் கழுவிய பின் ஆரம்பிக்க வேண்டும்.

3. அணிகலன் : உருத்திராட்சம், மணி மாலை, மந்திரித்த முடிச்சுகள் போட்ட கயிறு, தாயத்து, வில்லை...முதலியவற்றுள் ஏதேனும் ஒன்றையாவது கழுத்தில் அணிந்திருக்க வேண்டும். வலது கை மணிக் கட்டில் பசிய கொடி அல்லது நூல் அல்லது செப்புக் கம்பி வளையம் ஏதேனும் ஒன்று அணிந்திருந்தால் சிறப்புடையது. [பூசை நேரத்தில் மட்டுமாவது.] திருநீறு, குங்குமம், சாந்து சந்தனம், மை, திருமண் எனும் ஆறில் ஏதேனும் ஒன்றையாவது நெற்றி, கழுத்து, மார்பு, இரு கைகள் ஆகிய இடங்களில் பூசாவிதிப்படி அணிந்திருக்க வேண்டும்.

4. இருக்கை நிலை : சம்மணமிட்டு அமர்தல், குத்த வைத்து அமர்தல், நாற்காலியில் அமர்ந்து கால்களைத் தொங்க விட்டுள்ள நிலை, நின்ற நிலை, என நான்கு நிலைகளில் உள்ளவர்கள் மட்டும் படுத்த நிலையில் கூறிடலாம்.

5. அருளோற்று நிலை : நீர்த்துறையிலே (ஆறு, குளம், கிணறு) அமர்ந்தால் அப்பொழுது சூரியன் எந்தத் திசையில் இருக்கிறதோ அந்தத் திசையைப் பார்த்து இருக்க வேண்டும். பூசை மொழியைச் சொல்லும் போது ஒவ்வொரு முறையும் சின் முத்திரை நிலையில் வலது கையை வைத்துக்கொண்

தண்ணீரை அள்ளிப் பூசாமொழி கூறி முடித்த பெண்; உள்ளங்கையின் அடிப் பாகத்தில் கீழுதட்டை வைத்து உறிஞ்சிப் பருகிட வேண்டும்.

பூசை மொழியை நான்கு முறை கூறி முடிந்த பிறகோ அல்லது எட்டு முறை கூறி முடித்த பிறகோ கூடத் தண்ணீரைப் பருக லாம். நீர்த் துறையில்லாமல் வீட்டில் அமர்ந்து செய்யும் போது ஒரு குவளையில் நீர் வைத்துக் கொண்டு சிறிய கரண்டி யினால் பூசை மொழி 4 முறை (அ) 8 முறை கூறி முடித்த பிறகு நீர் அள்ளிப் பருகிட லாம்.

## குறிப்பு

1. பொதுவாக அருளேற்றிக் கொள்ள விரும்புகிறவர்கள் அல்லது அருளுலக ஆதர வுகளை விரும்புகிறவர்கள் சித்திக் காயந்திரி மந்தரம், சத்தி காயந்திரி மந்திரம், அருட் சினை மந்திரம் ஆகிய மூன்றையும் அன்றா டம் 48 முறை மட்டும் ஓதினால் போதும். இதனை ஒரே வேளையில் 48 முறை ஓதிட லாம்; அல்லது காலையில் 24 முறை, மாலை 24 முறை எனப் பிரித்தும் ஓதிடலாம்.

2. அருட்சினை மந்திரம், கற்பூரச் சோதி வழி பாட்டு மந்தரம் இரண்டும் சேர்ந்த முழுமையான அருட்சினை மந்திறத்தை 144 வகைக் கருவறைகளிலும், அன்றாடப் பூசைகளிலும் ஒரே ஒரு முறை அல்லது மூன்று முறை சொன்னாலே போதும், இதைச் சொல்லும் போது ஏதேனும் படை யல், ஊதுபத்தி, கற்பூரம் காட்டி நீர் வலம் காட்ட வேண்டும்.


3. இப்படிப் பூசை மொழி ஓதுவதே மானுட வாழ்வின் தொல்லைகளையும் துன்பங்களை யும் சந்திக்காமலிருப்பதற்காக அருளுலகத் தவர்களை வணங்கி வழி பட்டிடும் 'சந்தியா வணக்கம்' (வந்தனம்) என்று குறிக்கப்படு வதாயிற்று.

4. ஏறத்தாழ அருளுலகத்திலுள்ள பலருக் குரிய காயந்திரிகள் வெளியிடப்பட்டிருக்கின் றன. இவற்றில் அவரவர்க்கு விருப்பமான எந்தக் கடவுளர்க்குரிய காயந்திரியை வேண் டுமானாலும் தேர்ந்தெடுத்து அன்றாடம் பயிற்சி செய்யலாம். அல்லது அந்தந்தக் கடவுளரின் கருவறைக்குச் செல்லும் போது ஓதிடலாம். கருவறைகளில் ஓதும் போது அந்தந்தக் கருவறை மூலவர்க்குரிய காயந் திரியைக் கட்டாயமாக எட்டு முறை கூறிட வேண்டும் அல்லது கூறாமல் விட்டு விட லாம்.

5. சிவபுராணம் எந்த வேலையைச் செய்து கொண்டிருந்தாலும், அந்த வேலையைச் செய்து கொண்டே அன்றாடம் ஒரு முறை யாவது கூறிட வேண்டும். அல்லது பிறர் கூறக் கூற அவர் பின்னாலேயே கூறிட லாம். சிவபுராணம் கூறுவதால் அருளணுக் கள் படிப்படியாக ஒவ்வொருவர்க்குள்ளும் நிறைந்திடும்.


## விளம்பர விகிதம்

| | | |
|---|---|---|
| அட்டை கடைசிப் பக்கம் | ரூ | 1000 |
| 2ம் பக்கம் | ரூ | 750 |
| 3ம் பக்கம் | ரூ | 600 |
| உள் பக்கம் முழு பக்கம் | ரூ | 500 |
| அரைப் பக்கம் | ரூ | 250 |



## சிவ (சீவ) காயந்திரி மந்திரம்

தத்துவப் பிறப்பாய் வித்தே! மகேசா!
மகாதேவே! நீ தீயே வாகி
தன்னேடு உருத்திரப் பிறப்பைச் சாதித்தால்;
என்னேடு உன்னோடன்றி எங்கும் அருளுற
ஓம் நமச்சிவாய சிவாய நம ஒலியருளினாய்;
தழைத் தெழுநீ! நாங்கள் பிழைத் தெழ அருளாநீ!
அழைக்கிறோம்! செழுந்தீயே! செழுந் தெழுநீ!
வாசிவாசி! வாசிவாசி! வாசிவாசி!
வசிவசி! வசிவசி! வசிவசி!
ஓம் காயந்திரிந்து சிவமாகட்டும்;
ஓம் ஆவி, ஆன்மா, ஆருயிர் ஒன்றாகட்டும்.
தத்துவமே! நமச்சிவாய மென்னுணர்ந்தோம்
சித்தாந்தமே! சிவாயநம வென்றுணர்ந்தோம்
நங்! மங்! கிங்! வாங்! யங்!
காத்தருளுக! காத்தருளுக! காத்தருளுக!
ஓம்! ஓம்! ஓம்! ஓம்! ஓம்!

# இந்து வேத விடுதலை

ஞானாச்சாரியாரின் அருளுரைகளிலிருந்து இக்கட்டுரையை தொகுத்தவர்கள்
1 இந்து வேதம் பரப்பும் நாயகம் த. கேசவன் B.Com
2 அருள்மிகு சித்தர் சட்டநாதர் அ சுப்பிரமணி B.A.,

1 இப்படி ஒரு தலைப்பில் இந்து வேதம் பிறந்த நாட்டிலேயே கட்டுரை ஒன்று எழுத நேரிட்டிருக்கின்றது என்பது பற்றி எண்ணிப் பார்த்திட்டாலேயே போதும். இந்தத் தலைப்புக்கு உரிய பொருளும், நோக்கமும் மிகத் தெளிவாக விளங்கிடும். அதாவது, இந்து வேதம் என்ற ஒன்று இன்றைய காலக் கட்டத்தில் இந்துக்களுக்கு முறையாகவும், நிறைவாகவும், முழுமையாகவும், மெய்யாகவும்...கிடைக்காமல், கிடைக்க முடியாமல் மறைக்கப்பட்டிருக்கிறது, மறைக்கப்பட்டிருக்கிறது, மறைக்கப்பட்டிருக்கிறது என்ற மாபெரும் பேருண்மையை விளக்குவதே இக்கட்டுரையின் நோக்கமாகும், கொள்கையாகும், குறிக்கோளாகும்.

2 குமரி முதல், இமயத்தின் விளிம்பு வரை பரந்து விரிந்து கிடக்கின்ற இந்துமத இந்தியாவிற்குள் மட்டுமின்றி இந்த இரு எல்லைகள் கடந்துள்ள பல நாடுகளில் வாழ்ந்து கொண்டிருக்கின்ற இந்து வேதத்தின் பகுதிகளும் இந்து வேதம் பற்றிய செய்திகளும், இந்து வேதம் பற்றிய வரலாறுகளும் கடந்த இரண்டு நூற்றாண்டுகளாக ஒன்று திரட்டப்பட்ட பிறகுதான் இந்து வேதம் பற்றிய ஆய்வுகள் கணக்கற்று தோன்றின. அத்துடன் இந்து மதத்திற்கு, இந்து மக்களுக்கு, இந்துக்களுக்கு ..கடந்த இரண்டு நூற்றாண்டுகளில் ஏற்பட்டு விட்ட கணக்கற்ற, கடுமையான சோதனைகள், வேதனைகள், இழிவழிவுகள், பழிபாவங்கள், கண்மூடித்தனமான தாக்குதல்கள்,...முதலியவைகள் இந்து மதத்திற்குரிய இந்து வேதத்தையும், இந்து வேத வரலாற்றையும், தேடும்படிச் செய்து விட்டன.

3 சென்ற நூற்றாண்டில் வாழ்ந்த சந்திர குலத்திற்குரிய சித்தர் கருவூறார் பாரம்பரியத்தில் தோன்றிய கண்டப்பகோட்டை சித்தர் ஏளனம்பட்டியார் உ. இராமசாமி பிள்ளையவர்கள் ஆசியாக் கண்டம் முழுவதும் மட்டுமின்றி உலகம் முழுவதும் தேடி அலைந்து இந்து வேதத்தையும் இந்துவேத வரலாற்றையும் பற்றிய பல பேருண்மைகளைத் தொகுத்திட்டார். அப்பேருண்மைகள் இந்துவேத விடுதலை முழக்கத்தை பிறப்பெடுக்கச் செய்தன. ஆனால் சித்தர் ஏளனம்பட்டியாரோ முதல் இந்திய விடுதலைப் போர் எனப்படும் சிப்பாய்க் கலகத்தின் கதாநாயகராக உயிர் மூச்சாக செயல்பட வேண்டிய அவசியம் ஏற்பட்டு விட்டதால்; இந்து வேத விடுதலை முழக்கம் இந்து வேத மத நாடான இந்தியாவின் விடுதலை முழக்கமாக மாறிற்று. ஆனால் இவருடைய சமகாலத்தவரான அருட்பெருஞ்சோதி ஆண்டவர், அருட்பாக் கொடை வள்ளல், வடலூர்ப் பெருவெளி வள்ளல் பெருமான் இராமலிங்க அடிகளார் அவர்கள் இந்து வேதத்தையும் வேத ஆகமத்தையும் சாத்திரச் சம்பிரதாயச் சடங்குகளையும், கோத்திர நம்பிக்கைகளையும் கடுமையாகச் சாடித் தகர்த்து மெய்யான இந்து வேத விடுதலைக்குரிய 'இந்துவேத விடுதலை முழக்கத்தை எழுப்பினார். அந்த இந்துவேத விடுதலை முழக்கம்தான் ஆத்தி

கர்களையும், நாத்திகர்களையும் இந்து வேதம் பற்றிச் சிந்திக்கச் செய்தன.

4. இந்த இருபதாம் நூற்றாண்டில் இரண்டாம் உலகப் போருக்கு முன்னும் பின்னுமாக இந்த உலகம் முழுவதுமே அந்தந்த மதங்கள் அவரவர் வேதங்களைப் பற்றிய ஆய்வுகளைத் துவக்கின. அதன் விளைவாக ஒவ்வொரு மதமும் தன்னுடைய வேதத்தையும் வேத வரலாற்றையும் வெளிப்படுத்திப் பரப்புகின்ற மாபெரும் முயற்சிகளை மேற்கொண்டிட்டன. இந்தியத் துணைக் கண்டத்தில் மார்க்சீயச் சிந்தனைகளைக் காட்டுத் தீ போல பரப்பிய M.N. இராய் அவர்களும் ம.ப. பிள்ளை அவர்களிம் (M.P. Billai) கம்யூனிசக் கட்சி என்ற நிறுவன நிர்வாகக் கட்டமைப்புக்களின் மூலமும், பகுத்தறிவு இயக்கம், பகுத்தறிவுக் குடியரசு இயக்கம், உலக மத ஆய்வுக் குழு, உலக ஆன்ம நேய ஒருமைப் பாட்டுச் சங்கம்,...முதலிய பல் வேறு வகையான இயக்க அமைப்புக்களின் மூலமும், இந்தியாவில் ஏற்கெனவே இருந்து கொண்டிருக்கும் மடங்களின் வழியாகவும், துணையாகவும் இந்து மதத்திற்குரிய இந்து வேதம் பற்றிய ஆய்வுகளைத் துவக்கிறார்கள். அவர்களுக்கு ஆதரவாகவும் எதிர்ப்பாகவும் இருபெரும் பிரிவுகள் தோன்றின. அவை தொடர்ந்து இருபெரும் துருவங்களாக வளர்ந்தனவே தவிர வேறு எவ்விதமான பயனும் விளையவில்லை.

5. இவற்றுக்கெல்லாம் ஒரு விடிவு ஏற்படும் வண்ணமாக இம்மண்ணுலகின் முடிவுக்குள் தோன்ற வேண்டிய நாற்பத்தெட்டு பதினெண் சித்தர் பீடாதிபதிகளில்; பன்னிரண்டாவது பதினெண் சித்தர் பீடாதிபதியாகத் தோன்றியுள்ள குலலய குருபீடம். இந்து வேத நாயகம். இந்து மதத் தந்தை ஆதி அனாதி கடந்த தம்பிரான் அடிகளார், கருமூலப் பண்டாரம், குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரர், அந்தணர் அண்ணல் ஞானாச்சாரியார் அவர்கள் இந்துவேத வள வளர்ச்சிக்காகவும், இந்துமத ஆட்சி மீட்சிக்காகவும் தமது பணிகளைத் துவக்கினார். இந்து வேதத்தை இம்மண்ணுலகுக்கு வழங்கிய பதினெண் சித்தர் மடமும், இந்து மதத்தை இம்மண்ணுலகில் நிறுவிய பதினெண் சித்தர் பீடமும் முறையாக குருகுலம், திருகுலம், தருகுலம், கருகுலம் எனும் நான்கையும் துவக்கி அருளை அநுபவப் பொருளாக வழங்க வல்ல சன்னிதானம், ஆதினம், தம்பிரான், பண்டாரம், பண்டார சந்நிதி, ஆச்சாரியார்...முதலிய 48 வகைப்பட்ட அருட்பட்டத்தவர்களையும் உருவாக்கியுள்ளனர். இவர்கள் உலகெங்கும் பரந்து விரிந்து செயல்பட்டு இந்து வேதம் இந்த உலகம் முழுவதும் ஆற்றியுள்ள அரும்பெரும் பணிகளையும், சாதித்துள்ள சாதனைகளையும் தெள்ளத் தெளிவாகப் பட்டியலிட்டுத் தொகுத்தார்கள். இந்து வேதம் இந்த உலகில் தோன்றக் கூடிய அனைத்து வேதங்களுக்கிம் மூலமாகவும், அடிப்படையாகவும், கருவாகவும் உயிர் மூச்சாகவும் தொடர்ந்து இருந்து வருகின்றது என்ற பேருண்மையை மிகத் தெளி

[20ம் பக்கம் பாரக்க]


## இந்து ஆரணம்


(சித்தர் ஆன்மீக திங்களிதழ்)

சந்தா விபரம்

ஆண்டு சந்தா ரூ 40/-

தனி இதழ் ரூ 3-50 காசு

# அருட்போர் முரசு



ஊக்கமிகு உழுவலன்பு ஊற்றான நண்பா!
ஆக்கப் பணிகள் அளவற் றிருக்கத்
தூக்கமிகு நினைவோடு நாளும் திகைப்பதேன்.
நீக்கமறத் துறைகள் அனைத்தும் தொண்டாற்ற
எக்காலமும் நிலையாகிடும் பயனும் புகழும்
தேக்கிடத் திறங்கள் திட்டங்கள் உள்ளன
வேக்காடு போறாத உணவோ முயற்சிகள்
நோக்கோடு சேராத கடமைத் திட்டங்களோ
ஏக்கங்கள் இன்னும் ஏக்கங்களாகவே இருப்பதை
அக்கரையோடு நினைத்தால் வினைகள் வெற்றி
எக்காளத்தை எட்டிடாதோ பயன் கிட்டிடாதோ
காக்கை குருவி பல்லி கழுதை
எக்காலத்து எழுப்பும் குரலின் குறிப்பையும்
திக்கெட்டும் மின்னும் விண்மீன் குறிப்பையும்
சாக்காடு தவிர்க்கும் சாகாக் கல்வியையும்
பூக்காடு மணமாகு முடல்பெறு கலைகளையும்
சிக்கல்கள் போக்கும் பூசைமுறை நெறிகளையும்
போக்கொழியாத் தமிழ்க் சாத்திறங் களையும்
தோத்திறங்களையும் நான்மறை களையும்
நான்முறை களையும் நானெறி களையும்
நான்வேதங் களையும் ஆயகலைகள் அறுபத்து
நான்கினையும் அருட்கலைகள் நாற்பத் தெட்டையும்
கடவுட் கலைகளையும் தெய்வீகக் கலைகளையும்
பேய்க் கலைகளையும் நோய்க் கலைகளையும்
தேய்க் கலைகளையும் உலகறியச் செய்யும்
நோக்கம் உயிர்நோக்கம் உயர்நோக்கம் நமதே

ஆக்கமிகு ஊக்கம் போக்கற்றிடல் நியாயமா?
ஆடும் மயிலும் பாடும் குயிலும்
பேசும் கிள்ளையும் தவழும் தென்றலும்
தாவும் அருவியும் தண்ணொளி நிலவும்
காயும் கதிரவனும் அலைவீசும் கடலும்
விளக்கிடும் நம் கருத்து விளங்காமல் போகுமோ
நீடுதுயில் நீக்கி நீ நாடு புகழச்
செயல்பட எழு விழி செழி!
இனப் பெருமையின் ஊனம் அகற்றிட
மொழி யுரிமையின் இழிநிலை ஒழித்திட
நெடு வரலாற்றின் இருள் போக்கிட
இடுகி வா! நெடும் பகை யோட்டிட
விடுதலை எங்கும் எதிலும் நிலைத்திட
கெடுதலை அனைத்தும் தொலைத்திட ஒன்றுபடுவோம்
வென்றிடுவோம்! நின்றிடுவோம் என்று3மே! நாம்
இனம் மொழி நாடு காப்போமே.

## இந்து வேத விடு... [18-ம் பக்கத்தொடர்ச்சி]

வாக வரையறுத்தி, வடிவப்படுத்தி உலகுக்கு வழங்கும் சாதனைகளைச் சாதித்தார்கள். அதன் பிறகே, கடந்த சில நூற்றாண்டுகளாக முளைவிட்டுக் களைத்துச் செழித்து வளர்ந்து வரும் இந்து வேத விடுதலை முழக்கத்திற்குப் புதிய வளர்ச்சியும் ஏற்பட்டன, ஏற்பட்டன, ஏற்பட்டன.

6 இன்றைக்கு உலகம் முழுவதுமுள்ள மதவாதிகள் இந்துவேத நூல்களையும், இந்து மத நூல்களையும் காண வேண்டுமென்ற அக்கரைக்கும், ஆர்வத்துக்கும், அவாவிற்கும் ஆளாகி விட்டார்கள். குறிப்பாக உலகம் முழுவதுமுள்ள இந்துக்கள் தங்களுடைய இந்து மதத்தின் இந்து வேதம் பற்றித் தெரிந்து கொள்ள அளப்பரிய அக்கரையையும் ஆர்வத்தையும் காட்ட ஆரம்பித்து விட்டார்கள். அவற்றின் பயனாகத்தான் இந்து வேத விடுதலை ⱼமுழக்கம் என்ற தலைப்பில் கட்டுரைகள் ஆராய்ச்சி நூல்கள் ஆராய்ச்சியாளர்கள், பத்தியாளர்கள், மதவாதிகள், இலக்கியவாதிகள்...தோன்ற ஆரம்பித்து விட்டார்கள், தோன்ற ஆரம்பித்து விட்டார்கள், தோன்ற ஆரம்பித்து விட்டார்ம்ன்.

7 இந்த கால கட்டத்தில்தான் இந்து வேதத்திற்கும், இந்து மதத்திங்கும், உரிய மெய்யான பிறப்பிடம், இருப்பிடம், காப்பிடம், வாரிசு, தலைமை...முதலியவை பற்றிய பேருண்மைகள் வெளிவர இருக்கின்றன.

# ஆச்சாரியார்கள்


(இந்து ஆரணம்) ஆச்சாரியார்கள் ஞானாச்சாரியார் அருளுரைகளில் இருந்து தொகுத்தவர்கள்.

1. சத்திவிர ஞானி
2. சித்தரடியார் த. செயக்குமார், B.Tech.
3. அருட்போர் வியூகநாயகம், சீ. மணி
4. சித்தரடியார் சீ. கோலைமலை

இந்த மண்ணுலகத்திற்கென்று உருவாக்கப்பட்டுள்ள அருளுலகத்திற்கு ஆச்சாரியார்ள்கள் பொதுவாக ஆரம்பக் காலத்திலேயே தோன்றியிருக்கிறார்கள் என்ற பேருண்மை இந்து வேத நூல்களிலிருந்தும், இந்து மத நூல்களிலிருந்தும் தான் தெரிய முடிகின்றது. வேறு எந்த வேத நூல்களிலோ மத நூல்களிலோ இப்படிப் பட்ட ஒரு செய்தி இல்லை.

இந்து வேத நூல்களிலும், இந்து மத நூல்களிலும் இன்றுள்ள உலகம், முதலில் கோலமாகவும், பிறகு, நெருப்பு தணிந்து பனிக்கட்டி கோளமாயிற்று. அந்தப் பனிக் கட்டிக் கோளம் உருகி தண்ணீர் கோளம் உருவாயிற்று. அதன் பிறகு தண்ணீர் வற்ற ஆரம்பித்து அதற்குள்ளிருந்து கற் பாறைகளும், மண் நிறைந்த பகுதிகளும் தோன்றின. அப்பயிரினங்களுக்கும் உயிரினங்களுக்கும் தலைமையாக மனித இனம் தோன்றிற்று. அந்த மனித இனங்களின் நல்வாழ்வுக்காக அண்ட பேரண்டங்களில் இருந்து மூலப் பதினெண் சித்தர்கள் வந்தார்கள். இவர்கள் மூல ஆச்சாரியார்கள் என்று குறிக்கப்படுகின்றார்கள்.

இந்த மூல ஆச்சாரியார்கள் இம்மண்ணுலகில் பதிணென் சித்தர் மடத்தை நிறுவி அதன் மூலம் இந்து வேதத்தை அருளினார்கள். இந்த இந்து வேதந்தின் செயல் வடிவான இந்து மதத்திற்கு தலைமையாக பதிணென் சித்தர் பீடத்தை தோற்றுவித்தார்கள். இந்த இரண்டு நிறுவனங்களுக்கும் ''குலலய குருபீடமாக'', அந்தணர் அண்ணால் ஞானாச்சாரியார் என்பவரை தோற்றுவித்தார்கள். அப்படி தோற்றுவிக்



கப்பட்ட முதல் ஞாளாச்சாரியாரே அந்த ஆதி சிவனார். இந்த ஞானாச்சாரியாரே, பதிணென் சித்தர் மடத்து த போதிபதியாகவும், பதிணென் சித்தர பீடத்திற்கு பீடாதிபதியாகவும், இந்து வேத நாயகமாகவும், இந்து மதத் தந்தையாகவும், இந்து மதத்தின் முழு முதல் தலைமை ஆச்சாரியர் குருபீடக் குருதேவர் ஆகவும் பொறுப்பளிக்கப்பட்டார்.

இந்த ஞானாச்சாரியார் விருப்பப்படி தோற்றுவிக்கப்பட்ட சித்தர் கருவூறார் வழி ஞானாச்சாரியார்கள் 48 பேர்கள் நான்கு யுகங்களிலும் உலகியலின் தேவைக்கேற்ப தோன்றி பயிரினங்களையும், உயிரினங்களையும் இவற்றிற்குத் தலைமையாக தோன்றிய மானுட இனத்தையும் காத்திருதற்குரிய ஏற்பாடுகளைச் செய்திட்டார்.

முதல் ஞானாச்சாரியாரகிய ஆதி சிவனாரே இம்மண்ணுலககுக்குரிய அருளுலகின் அருளாட்சிப் பொறுப்புகளைக் கவனிப்பதற்காக எண்வகை ஆச்சாரியார்களை உலகியலின் தேவைக்கேற்பத் தோன்றி செயல்படும்படி திட்டம் செய்திட்டார். அதன்படி 1. ஈசுவராச்சாரியார் 2 ஆதி ஈசுவராச்சாரியார் 3 சிவாச்சாரியார் 4 ஆதி சிவாச்சாரியார் 5 பரமாச்சாரியார் 6 ஆதி பரமாச்சாரியார் 7 சங்கராச்சாரியார் 8 ஆதி சங்கராச்சாரியார் எனும் எண்வகை ஆச்சாரியார்கள் நான்கு யுகங்களிலும் தோன்றுவதற்குரிய செயல் திட்டம் ஆதி சிவனாலேயே வகுக்கப்பட்டுள்ளது.

மேலே குறிப்பிட்டபடி கடந்த மூன்று யுகங்களில் இந்து மதத்தின் முழு முதல் தலைமை ஆச்சாரியக் குருபீடக் குருதேவராக ஒன்பது ஞானாச்சாரியாக்கள் இந்தக் கலியுகத்தில் 3001-லிருந்து 3251 வரை உள்ள காலகட்டத்தில் பத்தாவது ஞானாச்சாரியார், குருமகா சன்னிதானம் ''ஞாலகுரு சித்தர் அமராவதி ஆற்றங்கரைக் கருவூறார்'', அவர்கள் (இந்து மத ஆண்டு 4371001 முதல் 4371251 வரை) தோன்றி செயல்பட்டிட்டார். இவரை அடுத்து பதினோராவது ஞானாச்சாரியார் குருமகா சன்னிதானம் ''ஞாலகுரு சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூறார்'' அவர்கள் கலியுகம் 3886 முதல் 4141 வரை (இந்து மத ஆண்டு 4371886 முதல் 4372141 வரை) தோன்றி செய்ல்பட்டிட்டார். இப்பொழுது பன்னிரெண்டாவது ''ஞானாச்சாரியார் குருமகா சன்னிதானம் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூறார் அவர்கள் தோன்றி இந்து வேதம் தழைக்கவும், இந்து மதம் பிழைக்கவும் செயல்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

ஆதி சிவனார் வகுத்த செயல் திட்டப்படி 1 ஈசுவராச்சாரியார் 2 ஆதி ஈசுவராச்சாரியார் 3 சிவாச்சாரியார் 4 ஆதிசிவாச்சாரியார் 5 பரமாச்சாரியார் 6 ஆதி பரமாச்சாரியார் எனும் ஆறுவகைப்பட்ட ஆச்சாரியார்களிலும் அவரவர் வகைக்குரிய 48 வகை ஆச்சாரியார்களும் தோன்றி விட்டார்கள் கடந்த மூன்று யுகத்தில். ஆனால் சங்கராச்சாரியார் வகையைச் சேர்ந்த ஆச்சாரியார்களில் நாற்பது ஆச்சாரியார்கள் கடந்த மூன்று யுகங்களில் தோன்றி விட்டார்கள். இன்றும் 8 சங்கராச்சாரியார்கள் இந்த கலியுகத்தில் தோன்ற வேண்டும். இதேபோல் ஆதி சங்கராச்சாரியார் வகை

[24 ம் பக்கம் பார்க்க]

தமிழகத்தில் எல்லா இடங்களுக்கும் விற்பனை முகவர்கள் தேவை.

**தொடர்பு முகவரி**

ஆசிரியர் : ''இந்து ஆரணம்''
எண். 13, குமாரசாமி தெரு,
அம்பத்தூர், சென்னை 600 053
போன் : 654447

# சித்தர் நெறி வாசகங்கள்

(பொன். விசயகுமார்)

1 மனித இனம் கண்ட முதல் மதம் இந்து மதம் எனப்படும் சித்தர் நெறியே.

2 மதமே மனிதனை விலங்கு நிலையிலிருந்து உயர்த்த வல்லது.

3 மதமே மனிதகுல வரலாறு; அதுவே அனைத்திற்கும் தாய்

4 கோயிலே மனித நாகரீகத்தின் தொட்டில்.

5 வழிபாடே மனிதப் பண்பாட்டின் உயிர்நாடி.

6 மந்திரமும் மருந்தும் மனிதனின் கண்கள்.

7 என்னையறிந்தால் உன்னையறியலாம் உன்னையறிந்தால் முன்னையறியலாம்

8 தன்னையறியும் அறிவே மெய்யறிவு பின்னையறிவு பேயறிவு.

9 வழிபாட்டு நிலையங்களே மானுடத்தின் விழிகள்.

10 இறைமை நினைவே குறைகளை நிறைவு செய்யும்.

11 குருவழியே அனைத்திற்கும் கருவழி.

12 உருவ வழிபாடே அருவுருவ சித்தியின் சத்திநிலை.

13 ஐந்தீ ஓம்பலே ஐம்புலனை வெல்லும் வழி.

14 அடியார்களைத் தொழலே முடிவிலா இன்பம் நல்கும்

15 அனாதியும் ஆதியும் ஆறுகாலத் தொழுகையால் அறியப்படும்.

16 ஆலயமும் கோயிலும் அற்றதை உற்றதாக்கும்.

17 'பொய்யடிமையில்லா மெய்யடியாரே சித்தர் நெறியார்'.

18 'நல்ல உள்ளம் வெல்வது உறுதி'

19 'எல்லாம் அவன் செயல் என்றால் அமைதி கிடைக்கும்'.

20 நாடி வருபவர் அனைவருமே நாம் தேடுபவர் தான்'.

21 'குரு கருவாகக் கொண்டோர் உருவாக மலிரார்'.

22 'அருகும் ஆலும் குருவின் ஆளுமை விளக்கும்'.

23 ஊழின்றி வழிகாட்டியுமில்லை, வழித்துணையுமில்லை.

Ph : 654447

TN/Ms (S)

நூல்-அஞ்சல்

**இந்து ஆரணம்**

சித்தர் ஆன்மீக மாத இதழ்

முகவரி : எண் 13, குமாரசாமி தெரு,
வரதராசபுரம், அம்பத்தூர்,
சென்னை-600 053.

பெறுநர்

திரு/திருமதி..................................

..................................

..................................

ஆசிரியர் வெளியிடுவோர்: கு. இரவிமணி No, 10. டிரஸ்ட்பாக்கம்,
தெற்கு மந்தைவெளி, சென்னை-28.

அச்சிடுபவர் : P. கணேசன், பொன்னத் சங்கர் ஆர்ட் பிரஸ், 277. M.G,R. காலனி,
அண்ணாநகர், சென்னை-40.